(1)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8074772

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District / மாவட்டம் : Thanjavur  PS / காவல்நிலையம் : Vigilance and Anti-corruption, Thanjavur(?)  Year / ஆண்டு : 2021  FIR No. / மு.த.அ. எண் : 08/2021  Date / நாள் : 24/03/2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act  Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 23.03.2021  Date to : நாள் வரை
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.03.2021  Time நேரம் : 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் : FIR Registered on 24/03/2021 at 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Typed & Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20 km North west from PS.
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. Arokia Samy  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. Iruthayasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்  (g) Address : முகவரி No. 63, Navy Nagar, Boothalur, Thanjavur Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Dhanakkodi, A.E., O&M, TANGEDCO, Veeramarasanpettai, Boothalur, Thanjavur Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— Not delayed —

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 24.03.2021ம் தேதி 09.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.A.ஆரோக்கியசாமி, த/பெ.அந்தோணிசாமி, நான்சி நகர், பூதலூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் என்பவர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.A.ஆரோக்கியசாமி, த/பெ.அந்தோணிசாமி, நான்சி நகர், பூதலூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் பெறுநர்: உயர்திரு லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் பூதலூர் நான்சி நகரில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள். அதில் எனது இளைய மகன் சத்தியசீலன் பெயரில் புஞ்சை புல எண்.594/1-ல் திட்டம் ஏக்கர் 12 சென்ட் 85-ல் அமைந்துள்ள மனைகளில் மனை எண்.64-க்கு 2400 சதுர அடியில் புதிதாக கெட்டி கட்டிடம் கட்டி அனுமதி பெற்றுள்ளார். அதில் தரை தளம் மற்றும்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........DSP V...... Rank ........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24/03/2021 / 10.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ....................
Rank: நிலை .................... No. எண் ....................

(3)

முதல் தளத்தில் கிழக்கு பகுதியானது 7 வருடங்களுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்டு, மின் இணைப்பு எண்.404-030-778, 404-030-697-என மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. அதன்பிறகு அதே மனையில் முதல் தளத்தில் மேற்கு பக்கம் ஒரு வீடும், இரண்டாவது தளத்தில் கிழக்கு பக்கம் ஒரு வீடும் என புதிதாக இரண்டு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு வீடுகளுக்கும் புதிய மின் இணைப்பு வேண்டி எனது மகன் சத்தியசீலன் பெயரில் பூதலூர் உதவிபொறியாளர், (இயக்குதலும் பராமரித்தலும்), தமிழ்நாடு மின்சார வாரியம், வீரமரசன்போட்டை அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ், குடும்ப அட்டை நகல், வாக்காளர் அட்டை நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் வீட்டு பத்திரம் நகல் ஆகியவைகளை இணைத்து உதவி பொறியாளர் திரு.தனக்கொடி அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்தேன். அதன்பேரில், கடந்த 15.03.2021ம் தேதி உதவி பொறியாளர் திரு.தனக்கொடி எனது வீட்டிற்கு வந்து, வீட்டை பார்வையிட்டு, நீங்கள் புதிதாக கட்டிய வீட்டிற்கு தற்காலிகமாக பழைய மின் இணைப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றும், புதிதாக கட்டிய வீட்டில் குடியிருப்பு வைத்தபிறகு சொல்லுங்கள் நான் புது மீட்டர் தருகிறேன் என்று சொல்லிவிட்டு உங்களது கணவரை என்னை வந்து அலுவலகத்தில் பார்க்கச் சொல்லுங்கள் என்று கூறிவிட்டு சென்றுள்ளார். அதன்பிறகு கடந்த 22.03.2021ந் தேதி பாஸ்டர் திரு.ஆப்ரஹாம் என்பவரை எனது வீட்டில் முதல் தளம் மேற்குபக்க வீட்டில் குடிவைத்தேன். அதனை அன்றே உதவி பொறியாளரிடம் போய் எனது வீட்டில் குடிவைத்த விபரத்தை கூறி புது மீட்டர் பாக்ஸ் வையுங்கள் என்று சொன்னேன். அதன்பேரில், அவர் 23.03.2021ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் AE சார் எனது வீட்டை வந்து பார்த்து, ஆய்வு செய்துவிட்டு, நீங்கள் ரூ.9,000/- எனக்கு கொடுங்கள், உங்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து மின் இணைப்புக்காக எவ்வளவு பணம் ஆன்லைனில் கட்ட வேண்டும் என்று சொல்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் எவ்வளவு பீஸ் கட்ட வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் முதலில் எனக்கு தனியாக ரூ.9,000/- கொடுங்கள், அதன்பிறகு நான் எவ்வளவு பீஸ் ஆன்லைனில் கட்ட வேண்டும் என்ற விபரத்தை குறித்துக் கொடுக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் இப்பொழுது பணம் இல்லை. நான் நாளை உங்கள் அலுவலகம் வந்து உங்களிடம் கொடுக்கிறேன் என்று சொல்லி அனுப்பினேன். ஆனால் எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. ஒரு மின் இணைப்புக்கு ரூ.2,818/- அரசுக்கு ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டியிருக்கும் என்று கேட்டு தெரிந்து கொண்டேன். உதவி பொறியாளர் என்னிடம் சொல்லும்போது சாதாரணமாக நான் ஒரு இணைப்புக்கு ரூ.4,000/-

வாங்குவேன், உங்களுக்கு இரண்டு இணைப்புக்கு ரூ.8,000/-மும் நான் வந்து உங்கள் வீட்டை பார்வையிட்டதற்கு ரூ.1,000/-மும் சேர்த்து ரூ.9,000/- கொடுங்கள் என்று சொன்னார். இந்த விபரத்தை சென்னையில் இருக்கும் எனது மகன் சத்தியசீலனிடம் கூறினேன். அதற்கு அவர் நீங்கள் உதவி பொறியாளருக்கு மின் இணைப்பு பெற லஞ்சம் கொடுக்க வேண்டாம். லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுங்கள் என்று கூறினார். அதனால், நான் ரூ.9,000/- பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு மேற்படி வீரமரசன்பேட்டை உதவி பொறியாளர் திரு.தனக்கொடி மீது நடவடிக்கை எடுக்க 24.03.2021ந் தேதி புகார் தயார் செய்து கொண்டு வந்துள்ளேன். மேற்படி உதவி பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு Sd/-. A.ஆரோக்கியசாமி, 24/03/2021.

இன்று 24.03.2021 ந் தேதி காலை 09.00 மணிக்கு தஞ்சாவூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் P.பத்மாவதி ஆகிய நான் அலுவலக பணியில் இருந்தபோது பூதலூர் தாலுக்கா நான்சி நகரைச் சேர்ந்த A.ஆரோக்கியசாமி, S/o.அந்தோணிசாமி என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று, புகாரின் உண்மைத் தன்மை பற்றி விசாரித்தும், புகார்தாரர் மற்றும் எதிரியின் நன்னடத்தைகள் பற்றி விசாரணை மேற்கொண்டும், வழக்கின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திய பின்பு தஞ்சாவூர் ஊ.த.க பிரிவு குற்ற எண்.08/2021 சட்டப்பிரிவு 7 Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன்படி 24.03.2021 - 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

ஒம்- 24/03/2021
P.பத்மாவதி,
Inspector, V&AC, Thanjavur

இத்துடன் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று கோப்பிலும் வைக்கப்பட்டது.

24/03/2021
Inspector of Police,
V&AC,
Thanjavur.